REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஐப்பசி 19உ திங்கள் (4—11—57) ★ ★ வெளியூர்: ஐப்பசி 20உ செவ்வாய் (5—11—57) [இதழ் 122

உலக மக்கள் தொகை பற்றி ஒரு கணக்கு

உலக மக்கள் தொகையில் பாதிக்குமேல் அமெரிக்கா, ரஷ்யா, இந்தியா, மற்றும் சீனு ஆகிய நான்கு நாடுகளிலும் இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

உலக மக்கள் தொகையில் ஆறில் ஒரு பகுதி பிரிட்டன், ஜப்பான், இந்தோனேஷியா, மேற்கு ஜெர்மனி, பிரேசில், மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளைச்சாரும்; இவற்றில் ஒவ்வொரு

(3-ம் பக்கம் பார்க்க)

சாதிகளை ஒழிக்க ஒரு திட்டம் தேவை

கிராம அமைப்பு முறை மாருவிடில் கொடுமைகள் நடந்தே தீரும்

ஒரு கிராமத்தில் ஓரே சாதி மக்கள் பெருவாரியாக இருக்க விடக் கூடாது

பெருவாரியாகஉள்ள சாதியினர் சிறுபான்மையினரை ஆதிக்கம் செலுத்துகின்றனர்

சாதிச்சண்டைகள் ஏற்படாமல் தடுக்க அண்ணு தரும் அரிய யோசனை

"ஐந்தாண்டுத் திட்டம்போல, இந்நாட்டில் சாதியை ஒழிப்பதற்கு ஒரு திட்டம் தேவை; இதை நான் சட்டசபையில்கூட எடுத்துச் சொல்ல இருந்தேன்—நேரமில்லாததால் சொல்லவில்லை.

"இந்த நாட்டிலுள்ள தற்போதைய கிராம அமைப்புமுறையை மாற்ருவிடில் கொடுமைகள் நடந்தே தீரும். ஒரு கிராமத்தில் ஒரு குறிப்பிட்ட சாதி மக்கள் பெருவாரியாக இருந்தால் அவர்கள் மற்ற சிறுபான்மை மக்கள்மீது ஆதிக்கம் செய்யத்தான் முற்படுவார்கள்.

"இதற்கு உதாரணமாக ஒன்றை இங்கு குறிப்பிடவிரும்புகிறேன்—சோழவந்தானில் 'முதலியார் கோட்டை' என்று ஒன்று இருக்கிறது; அது சாதாரணமாகக் களிமண்ணுல் கட்டப்பட்ட சிறிய சுவர்தான்; அந்தச் சுவருக்கு உட்பக்கம் இருப்பவர்களெல்லாம் 'முதலியார்'கள்; அவர்கள் அந்தச் சுவரைத்தாண்டி வெளியே போகமாட்டார்களாம்; அப்படிப் போனுல், மற்ற சாதிகளை அடக்கத்தான் போவார்களாம். இந்த நிலைமை இன்றும் சோழவந்தானில் இருப்பதைக் காண்கிறோம்.

"சாதாரணமாக 'முதலியார்' என்று சொல்லப்படுபவர்களே இப்படியிருந்தால், இன்னும் விரகுணம் படைத்த மறவர்கள் எப்படியிருப்பார்கள் ?

"எனவே, ஒரு கிராமத்தில் ஒரு சாதி, மெஜாரிட்டி வகுப்பாக இருக்குமானுல், அது மற்ற வகுப்பினரை அடக்கியாள—ஆதிக்கம் செலுத்தத்தான் செய்யும். இது அவர்களுக்குள்ள பலத்தினுல் ஏற்படும் ஒரு ஆணவம்.

"ஆகையினுலே, எந்தக் கிராமத்திலும் எந்த ஒரு குறிப்பிட்ட சாதியும் இன்னெரு சாதியினரை அடக்கியாளும்படியான மெஜாரிட்டியில்லாதவகையில் புதுக் கிராம அமைப்பு தேவை; அப்படிச் செய்தால் இத்தகைய சாதிச் சண்டைகள் ஏற்படாமல் தடுக்கமுடியும்.

"ஒரு குறிப்பிட்ட சாதியினரை இடம்விட்டு இடம் மாற்ற முடியுமா என்று கேட்பவர்களுக்கு நான் சொல்லுவேன்—தேவிகுளம்-பீர்மேட்டில் பட்டம் தாணுப் பிள்ளை என்ன செய்தார்? 'அப்பகுதியில் தமிழர்கள் மெஜாரிட்டியாகவிடக் கூடாது' என்று கருதி, ஏராளமான மலையாளிகளுக்கு நிலமும் பணமும் கொடுத்து வீடு கட்டிக்கொண்டு குடியேறச் செய்தார்—அந்தப் பகுதியை, கேரளத்துக்கு உரிமை கொண்டாடவே அவர் அப்படிச் செய்தார். ஆனுல், அது தவருன முறை. அந்த முறை, ஒரு நல்ல காரியத்துக்குப் பயன்பட வேண்டும் என்று கூறுகிறேன்.

இதை விடுத்து, சீர்திருத்தப் பிரச்சாரத்தினுல் மட்டும் ஒன்றும் நடந்துவிடாது. தில்லை தீட்சிதர் காலம்—நந்தனுர் காலந் தொட்டுதான் சீர்திருத்தப் பிரச்சாரம் இந்த நாட்டில் இருந்துவருகிறது"

—இவ்வாறு, 30-10-57 மாலை சென்னை-கோடம்பாக்கம் தோழமைக் கழகத் துவக்க விழாவில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுகையில் அண்ணு அவர்கள் குறிப்பிட்டுவிட்டுத் தொடர்ந்து பேசியதாவது :—

"இந்தச் சாதிச் சண்டைகள் இன்று நேற்று தோன்றியவையல்ல—நாளையோடு முடிந்துவிடக் கூடியவையுமல்ல. சாதிகளை இன்னும் நாட்டில் வைத்திருக்கும்வரை—அதை மாற்றும் திறன் சர்க்காருக்கு ஏற்படும்வரை அடுத்தடுத்து நடந்துகொண்டு தானிருக்கும் என நம்புகிறேன்.

"இதைப் பற்றிப் பலர் பேசினுலோ, எழுதினுலோ, பொதுக் கூட்டத்தில் அலசினுலோ, புதுப் புகைதான் உண்டாகுமே தவிர—பாதிக்கப்பட்டபகுதியிலே புதிய சிக்கலைத்தான் உண்டாக்குமே தவிர, அமைதியோ, அதற்கொரு மார்க்கமோ ஏற்பட்டுவிட முடியாது. எனவேதான், பொதுவாக எந்தச் சமுதாயத்தின்மீது நாங்கள் அக்கறை கொண்டுள்ளோம் என்பதை இந்த நேரத்தில் அதிகம் பேசக் கூடாது எனக் கருதி,—நேற்று புரசையில் இதுபற்றி என் கருத்து என்ன என்று அறிந்து கொள்ள பலர் ஆவல் கொண்டிருந்ததையறிந்து அக் கூட்டத்தில் ஒரு குழந்தைக்கு 'இமானுவல்' என்று பெயர் சூட்டினேன். இதைக் கொண்டே யூகசாலிகளாக இருப்பவர்கள் புரிந்து கொள்வார்கள். இதைவிட இன்னும் புட்டுப் புட்டுச் சொல்லத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

"எதிர்க்கட்சிகளில் உள்ள நாங்கள் பல பிரிவுகளாகஇருக்கிற காரணத்தால் ஒரு பிரச்சினையை ஒன்றுகச் சேர்ந்து வலியுறுத்துவது என்பது முடியாத காரியம். இந்த அரசாங்கம் பல கொடுமைகளைச் செய்து வருகிறது; தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பாதுகாப்பளிக்கத் தவறி விட்டது. எனவே, இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லை என்றோம். இப்பிரச்சினையை அணுகப் பல கோணங்கள் இருக்கின்றன. கட்சிகளிடையே தோழமையில்லாத காரணத்தால்தான் இவ்வளவு தொல்லைகள்.

"போட்டிருந்த சலவைச் சொக்காயில் அழுக்குப் படிந்திருந்தால் குழந்தையைத் தகப்பன் திட்டுவான்; கன்னத்தில் அறைவான். கொஞ்சம் யோசனையுள்ள தகப்பனுக இருந்தால், 'நல்ல துணியைக் குழந்தை தானுக அழுக்காக்கிக் கொண்டிருக்குமா? தன்னையறியாமல் சேறு படிந்திருக்கக்கூடும்' என்று கருதி, 'சேற்றை யார் போட்டார்கள்? என் சேறு படிந்தது?' என்பதைச் சிந்தித்திருப்பான். அவசரக்கார தகப்பன் மகனை அடிப்பான்; ஆர அமர யோசிக்கக்கூடிய தகப்பன் சேறு போட்டவனைக் கண்டிப்பான். 'சேறு யாரால் போடப்பட்டது? சாலையிலே சேறு இருக்கக் காரணமென்ன?' என்று அறிந்து, சாலையிலேயுள்ள குறைபாடுகளையும் கண்டிப்பான்.

"இதைப்போல, பிரச்சினையை அணுகி, சிறு முயற்சிகளாவது எடுத்திருக்கிருர்களா சர்க்கார் என்று கேட்க விரும்புகிறேன்.

"சாதி ஒழியவேண்டுமென்று காங்கிரஸ்காரர்கள் சொல்லவில்லை; சாதிகளை வைத்துக் கொண்டே, பிரச்சினைகளைத் தீர்த்துவிடலாமெனக் கருதுகின்றனர்.

"'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்று கூறிய தேசியக் கவி பாரதியாரும், 'ஆயிரம் உண்டிங்கு சாதி; இதில் அன்னியர் புகலென்ன நீதி?' என்றுதான் சொன்னுர். இந்த என் ஆயிரம் சாதிகள் இருக்கவேண்டுமென்று கேட்கவில்லை. இங்கு ஆயிரம் சாதிகள் இருக்கிறபடியே இருக்கும்; ஆனுல், 'அன்னியர் இங்கு என் வரவேண்டும்' என்றுதான் பாரதியாரும், தேசிய வாதிகளும் கேட்டனர்.

(பேச்சு முடியவில்லை)

கிராமப் பஞ்சாயத்துச் சீர்திருத்தம்

மக்கள் ஆதரவுடன் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்

சட்டமன்றத்தில் ஏ.கோவிந்தசாமி, செல்வராஜ் பேச்சு

சென்னை, நவ. 1—

இன்று நடைபெற்ற சட்டமன்றத்தில் கிராமப் பஞ்சாயத்து (திருத்த) சட்டத்தை அமைச்சர் லூர்து அம்மையார் கொண்டுவந்தார்கள். சட்டம் நிறைவேற்றப்பட்டது.

நடைபெற்ற விவாதத்தில் நமது கழக உறுப்பினர்களான தோழர்கள் ஏ. கோவிந்தசாமி, செல்வராசு ஆகியோர் கலந்துகொண்டு நல்லுரையாற்றினர்.

ஏ. கோவிந்தசாமி

"நான் இந்தச் சட்டத்தை எதிர்த்து ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்தச் சட்டம், வாக்கெடுப்பில் கைத்தூக்கும் முறையை அமுலாக்குகிறது; இது விரும்பத்தக்கதல்ல.

வாக்குப் பதிவு, இரகசிய முறையில் நடைபெறுவதே சிறந்தது என்று வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். அப்போதுதான், விருப்பத்திற்கு ஏற்றவாறு வாக்களிக்க முடியும். இதை நான் பலமுறை வற்புறுத்திக் கூறிவந்திருக்கிறேன். இந்தத் திருத்தச் சட்டத்தில் அதைப்பற்றி ஒரு வரிகூட காணப்படவில்லை.

"பஞ்சாயத்துத் தலைவர்களை, உறுப்பினர்களே தேர்ந்தெடுக்க சட்டம் வழிகோலுகிறது. இதுவும் இந்தக் காலத்திற்கு விரும்பத்தக்கதல்ல; பஞ்சாயத்துத் தலைவரை மக்கள் தேர்ந்தெடுப்பதே சனநாயகத்திற்கு உகந்ததாகும்.

"இப்போது, பஞ்சாயத்துத் தலைவர்களைத் தேர்ந்தெடுத்த பின்னர் நீக்குவதற்கு வழி இல்லை; இதையும் கவனிக்கவேண்டும்.

"இன்று தேர்தல்களில் வாக்குப் பதிவுமுறை சரியான முறையில் இல்லை; பாராளுமன்றத்திற்குத் தனிப் பெட்டிகளும், சட்டமன்றத்திற்குக் குறிபோடும் முறையும், மைனர் பஞ்சாயத்துகளில் கைதூக்கும் முறையும் உள்ளது. இதனுல், செல்லுபடியாகாத வாக்குகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது; எனவே, ஒரேமாதிரியான வாக்குப் பதிவுமுறை ஏற்படுத்தப்பட வேண்டும்.

"பஞ்சாயத்துக்களில் அரசியல் பூசல்கள் தலையிடுவதாகக் குற்றம் சாட்டுகின்றனர்; அதனுல்தான், தலைவர் தேர்தலை உறுப்பினர்களைக் கொண்டே நடத்த வேண்டியுள்ளது என்று கூறப்படுகிறது. இது, தவருன அடிப்படையில் பிரச்சினையை அணுகியதால் ஏற்பட்ட முடிவாகும். அரசியல் பூசல்களும், குழப்பமும் பொது விஷயங்களில் இருக்கத்தான் செய்யும். எனவே, மக்கள் தேர்ந்தெடுப்பது நல்லதல்லவா? என்று மதிப்பிட வேண்டும்.

"உறுப்பினர்களே தலைவர்களைத் தேர்ந்தெடுப்பது, பணக்காரர்கள் மட்டும் தலைவர்களாக வருவதற்கும், மக்கள் விரும்புவோர் வாமுடியாமல் இருப்பதற்கும் வழிகோலுவதாகும்.

"மேலும், வாக்குப் பதிவு இரகசிய முறையில் நடைபெறுவது விரும்பத்தக்கது என்பதை வற்புறுத்துகிறேன்.

செல்வராசு

"நான் இந்தத் திருத்தச் சட்டத்தை ஆய்வுக் குழுவின் முடிவுக்கு விடவேண்டும் என்பதை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

"முன்பு, பஞ்சாயத்து தலைவர்களை மக்கள் தேர்ந்தெடுத்தனர். இப்போது உறுப்பினர்களே தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கூறுவதுசர்வாதிகாரப் போக்கை வளர்ப்பதாகும். இதனுல் பணக்காரர்கள் மிகுந்த இலாபமடைவார்கள்.

"இப்போது உள்ள முறை 100-க்கு 90 இடங்களில் சரியாகவே வேலை செய்து வருகிறது; ஒரு சில இடங்களில் குறைகள் இருக்கலாம்; அதற்காக நல்ல முறையை மாற்றுவது அறிவுக்குப் பொருத்தமானதல்ல.

"மேலும், தேர்ந்தெடுக்கப்படும் பஞ்சாயத்துத் தலைவர்களை, விரும்பாதபோது நீக்கிவிட வழிவகைகள் ஏற்படுத்த வேண்டியது மிக அவசியம். தேர்தல் முறையை மாற்றுவது விரும்பத்தக்கதல்ல.

"இப்போது நாட்டில் ஆங்காங்கு கிராமங்களில், கிராமக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன;

(2-ப் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 4—11—57 திங்கள்

ஏமாற்று வித்தை--கேலிக்கூத்து!

நமது சிற்றூர் ஊராட்சி மன்றங்களுக்கு, இன்றுள்ளதைவிட கூடுதலான அதிகாரத்தை அளிக்கப்போவதாகக் கூறிவருகின்றனர் நமது காங்கிரசு ஆளவந்தார்கள். அதற்கென 'வெள்ளை அறிக்கை, என்ற பெயரால் விரிவான அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளனர் நமது ஆளவந்தார்கள்.

தாங்கள் பெற்றுள்ளதாகக் கூறப்பட்டுவரும் சுதந்தரத்தை சிற்றூர் மக்களுக்கும் பகிர்ந்து அளிக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் செயல்படுவதாகவும், அதன் பலன் தான் 'வெள்ளை அறிக்கை' என்றும் ஆளவந்தார்கள் அறிவிக்கின்றனர். தங்கள் போக்கிற்கு ஆதரவாக, அரசியல் சட்டத்தில் உள்ள 'பஞ்சாயத்து இராஜ்ய' அமைப்பு பற்றியுள்ள இலட்சியக் கோட்பாட்டையும் ஆளவந்தார்கள் காட்டிவருகின்றனர்.

சிற்றூர் பஞ்சாயத்துகளுக்கு அதிகாரத்தை விரிவாக்கப்போவதாகக் கூறும் நமது காங்கிரசு ஆளவந்தார்கள், அதிகாரத் துறையில்மாநிலங்களுக்கும் இந்தியப் பேரரசிற்கும் இருந்து வரும் உறவு முறையைச் சிந்தித்துப்பார்க்கவேண்டும். இதுபற்றி அவர்கள் ஏற்கனவே சிந்தித்துப் பார்த்திருப்பதுடன் நில்லாது, இத்துறையில் தாங்கள் சிந்தித்துக் கண்ட உண்மையை வெளிப்படையாக அவர்கள் கூறியும் உள்ளனர்—இன்று கூறியும் வருகின்றனர்.

மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த அதிகாரமே குறைவானது என்றும், அந்தக் குறைந்த அதிகாரத்தையும் மெள்ள மெள்ள தனதாக்கிக் கொண்டு வருகிறது இந்தியப் பேரரசு என்றும் அவர்கள் குறைபட்டுக்கொண்டு வருகின்றனர். இத்தகு போக்கைக் கைவிட இந்தியப் பேரரசு முன்வரவேண்டும் என்பதுடன், மாநிலங்களுக்கும் மேலும் அதிகாரம் வழங்கவேண்டும் என்றும் வாதித்துவருகின்றனர்.

அதிகாரத்துறையில், டெல்லிக்கும் தங்களுக்கும் இருந்து வரும் உறவு இத்தகு இழிந்த நிலையில் இருக்கின்றபொழுது, இந்த இழிந்த நிலை தங்களுடைய நெஞ்சை அரித்துக் கொண்டு இருக்கின்றபொழுது, தாங்களாக மனமுவந்து சிற்றூர் ஆட்சிமன்றங்களுக்கு இருந்து வரும் அதிகாரத்தைக் கூட்டப் போவதாக நமது காங்கிரசு ஆளவந்தார்கள் கூறுவது, எத்தகையதாக இருக்கக்கூடும் என்பதை யூகித்து அறிந்துகொள்ளுவது எவருக்கும் எளிதாகும். தங்களிடம் நியாயமாக இருக்க வேண்டிய அதிகாரம் அனைத்தையும் டெல்லி பறித்துக் கொண்டு வருகிறதைக் கண்டு மனம் புழுங்கிக் கிடக்கின்ற நமது ஆளவந்தார்கள், சிற்றூர் ஆட்சிமன்றங்களுக்கு மேலும் அதிகாரத்தைக் கூட்டப்போகிறோம் எனக் கூறுவது வியப்புக்குரியதாகும்.

மாநில ஆட்சி நிலையில் நமது காங்கிரசு ஆளவந்தார் பெற்றுள்ள அதிகாரத்தின் அளவை பின்னணியாக வைத்துக் கொண்டுதான், சிற்றூர் ஆட்சி மன்றங்களுக்கு இவர்களால் வழங்கப் போவதாக அறிவிக்கப்படும் அதிகாரத்தின் தரத்தையும் தன்மையையும் மதிப்பிடவேண்டும். அவ்வாறு மதிப்பிடுவதின்மூலம், சிற்றூர் ஆட்சித் துறையில், நமது காங்கிரசு ஆளவந்தார்களால் செய்யப்படப் போகும் சீர்திருத்தங்களின் உண்மை நிலையைத் தெளிவாகத் தெரிந்துகொள்வது சாத்தியமாகும். சிறந்த,

சிற்றூர் ஆட்சி மன்றங்களுக்கு மேலும் அதிகாரத்தை வழங்க வேண்டும் என்று நமது ஆளவந்தார்கள் உண்மையிலே விரும்புகின்றனர் எனக் கொள்வதானாலும்கூட, இவர்களிடத்தில் மிதமிஞ்சிய அதிகாரம் குவிந்துகிடந்தால் அல்லவா, அதில் கொஞ்சத்தை சிற்றூர் ஆட்சி மன்றங்களுக்கு இவர்களால் வழங்க இயலும்? இவர்களே அதிகாரப் பஞ்சத்தில் அடிப்பட்டுக்கொண்டு இருக்கும் பொழுது, தங்கள் வசமுள்ள குறைந்த அதிகாரத்தையும் சிற்றூர் ஆட்சி மன்றங்களிடம் இவர்கள் ஒப்படைத்துவிட விரும்புவரா என்பது கருதத்தக்கது. நமது காங்கிரசு ஆளவந்தார்களும் நிலைமைக்குக் கட்டுப்பட்டவர்கள்தான். டெல்லியை நோக்கி, தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது கையளவு அதிகாரமேயாகும் என வேதனைப்பட்டுக் கிடக்கின்ற ஆளவந்தார்கள், அந்தக் கையளவு அதிகாரத்தையும் சிற்றூர்களுக்கு வழங்கிவிடுவர் என எதிர்பார்க்க முடியுமா? அப்படியே வழங்குவதாக வைத்துக்கொண்டாலும், அதன் பிறகு நமது ஆளவந்தார்களிடம் மிஞ்சக்கூடிய அதிகாரம் தான் என்ன ?

இல்லை—கடுகளவு அதிகாரமும் இவர்களிடம் இருக்கமுடியாது. இப்பொழுதே அதிகாரமில்லாத சேவகர்களாக இருக்கின்றவர்கள், அதற்குப் பிறகு அதிகாரமிழந்த நிர்வாண சேவகர்களாகத்தான் நமது ஆளவந்தார்கள் நடமாடவேண்டும்!

இம்மாநிலத்தை ஆட்சி புரிந்துவருகின்ற நமது காங்கிரசு ஆளவந்தார்களிடம் அதிகாரம் குவிந்துகிடக்கவில்லை. எனவே இவர்கள், சிற்றூர் ஆட்சிமன்றங்களுக்குள்ள அதிகாரத்தைக் கூட்டப்போகிறோம் எனக் கூறுவதிலும் கடுகளவு பொருளும் கிடையாது.

இத்துறையில், இவர்கள் செய்யக்கூடியது அனைத்தும், பஞ்சாயத்துத் தலைவரை,இன்று நடைமுறையில் உள்ளதுபோல் வாக்காளர்கள் நேரடியாக தேர்ந்தெடுப்பதா அல்லது சிற்றூர் ஆட்சி மன்ற உறுப்பினர்கள் மட்டுமே நேரடியாகத் தேர்ந்தெடுப்பதா என்பதை வரையறுப்பது போன்றதாகத்தான் இருக்க முடியும். இதைத் தவிர, இந்த ஆளவந்தார்களால் எல்லா இனங்களிலும் தன்னிறைவு உடைய சிற்றூர் ஆட்சி மன்றங்களை ஒருக்காலும் உருவாக்க முடியாது. அவ்வாறு உருவாக்கப்போவதாகக் கூறுவது நூற்றுக்கு நூறும் ஏமாற்று வித்தை—கேலிக்கூத்து!

கைத்தறிதொழில் வளர்ச்சி

மாநிலத் திட்டங்களை திட்டக் குழு பரிசீலிக்கிறதாம்

பம்பாய், அக். 31—

கைத்தறி வளர்ச்சித் திட்டங்களைச் சரிபார்ப்பதற்காக இந்திய சர்க்காரால் அமைக்கப்பட்ட குழு இந்தியாவில் பல்வேறு மாநிலங்களிலும் கைத்தறித் தொழில் வளர்ச்சிக்காக ரூ.1,20,57,839·75 காசுகள் செலவுள்ள திட்டங்களுக்கு அங்கீகாரமளிக்கும்படி சிபாரிசு செய்திருக்கிறது.

இக்குழு மாநில சர்க்கார்களிடமிருந்து வந்துள்ள 96 திட்டங்களைப் பரிசீலித்தது.

கைத்தறித் தொழிலின் வளர்ச்சிக்காக, 1957 செப்டம்பர் மாதத்தில் மாநில சர்க்கார்கட்கு மொத்தம் ரூ. 30,29,508·67 காசுகள் அனுமதிக்கப்பட்டது. ஏப்ரல் 1-ந் தேதி முதல் செப். 30-ந் தேதி வரையுள்ள காலத்தில் மொத்தம் ரூ. 1,30,23,473·84 காசுகள் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

1957 சனவரி முதல் உள்ள 7 மாத காலத்தில், உள்நாட்டு நூலிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட கைத்தறித் துணி 10,776·2 இலட்சம் கெசம் என்று மதிக்கப்பட்டிருக்கிறது. 1956-ம் ஆண்டில் இதற்குச் சரியான காலத்தில் உற்பத்தி 9,857·0 இலட்சம் கெசமாகும்.

துணி உற்பத்தியில் இலட்சிய அளவு

ஒரு புள்ளி விவரம்

புதுடில்லி, நவ. 1—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நாட்டில் துணி உற்பத்தியின் இலட்சிய அளவு ஆண்டொன்றுக்கு 840 கோடி கெசமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது; ஏற்றுமதிக்கான 100 கோடி கெசம் துணியும் அதில் அடங்கியிருக்கிறது. திட்ட காலக் கடைசியில் நபர் வீதத் துணி உபயோகம் 18·5 கெசமாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவில் பருத்தித் துணித் தொழில் மிகப் பெரிய தொழிலாகும்; நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இப்போது மொத்தம் 465 துணி ஆலைகள் இருக்

(3-ம் பக்கம் பார்க்க)

சென்னை பஸ்களில் நாணய மாற்றுக் கணக்கு

அரசாங்கத்தின் விளக்கம்

சென்னை, அக். 3—

'நயா பைசா'-பழைய நாணயங்கள் மாற்றுப் பட்டியலின்படி, பழைய நாணயங்களின் மொத்த மதிப்பீடு தங்களுக்குக் கிடைப்பதில்லை என்று அரசாங்கப் போக்குவரத்து பஸ்களில் பிரயாணம செய்யும் மக்களிடையே ஒருவித எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. பழைய நாணயங்களை மாற்றுவது தங்களுக்கு நஷ்டமேற்படும் விதத்தில் செய்யப்படுவதாகவும் அவர்கள் கருதுவதாகத் தோன்றுகிறது. இரண்டு இரண்டணா நாணயங்கள் அரசாங்க பஸ்களில் 24 நயா பைசாவாக மட்டுமே கருதப்படுவதாகவும் பத்திரிகைகளில் தகவல்கள் வந்தன; இத்தகைய செய்திக்கு ஆதாரமே இல்லை; அதுபோன்ற உத்தரவு எதுவும் பிறபிக்கப்படவில்லை. எனினும், கண்டக்டர்கள் மனதில் அது போன்ற தப்பபிப்பிராயம் இருந்தால் அதைத் தீர்ப்பதற்காக, நாணய மாற்றுப் பட்டியலின்படியே 'நயா பைசா' கணக்கைக் கணக்கிடும்படி உத்தரவிடப்பட்டிருக்கிறது. உதாரணமாக, மூன்று ஓரணா நாணயங்கள் 19 'நயா பைசா'வாக மதிப்பிடப்பட வேண்டும்—18 நயா பைசாவாக அல்ல. இரண்டு இரண்டணா நாணயங்களை 25 'நயா பைசா'வாகக் கணக்கிட வேண்டும்.

'பஞ்சாயத்துத் தலைவர் தேர்தல் நேரடியாக நடைபெற வேண்டும்'

'மறைமுகத் தேர்தல் என்ற மாற்றம் விவேகமானதல்ல'

'பஞ்சாயத்து உறுப்பினரின் பதவிக் காலத்தையும் நீடிக்கத் தேவை இல்லை'

"கிராமப் பஞ்சாயத்து (திருத்த) மசோதா இரண்டு முக்கியமான விஷயங்களைப் பற்றியது. இப்போது வயது வந்த வாக்காளர்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிற பஞ்சாயத்துத் தலைவர், இனி மசோதாவின்படி, பஞ்சாயத்து உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார். இந்த மாற்றத்திற்காகச் சொல்லப்படும் காரணம் எல்லாம், இப்போதையமுறையில் குறைகள் இருக்கின்றன என்பதே. ஆனால், அந்தக் குறைகள் என்ன வென்பதை வெளியிடவும் இல்லை —சுட்டிக் காட்டவும் இல்லை.

அரசியல் சட்டத்தின் 40-வது விதி சொல்லுகிறபடி, பஞ்சாயத்துக்கள் ஒரு சுய ஆட்சியின் அங்கமாக விளங்க வேண்டும் என்றால், வாக்காளர்களே — வயது வந்த குடிமக்களே தலைவரை நேரடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். பஞ்சாயத்தினை வழி நடத்திச் செல்பவரோ அதன் தலைவர் தான். தனியாக நிர்வாக அதிகாரிகள் இல்லாத பெரும்பாலான பஞ்சாயத்துக்களில் தலைவர்தான் நிர்வாக அதிகாரியும் ஆவார். கிராமங்களில் உருவாக வேண்டிய புதிய சமூக அமைப்பான கூட்டுறவு 'காமன்வெல்த்'தின் முன்னேற்றப் பிள்ளையாக அவர்தான் இருந்தாகவேண்டும். பஞ்சாயத்து நிர்வாகத்தினை, தங்களின் சுயமான கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கத் தேவையான சமூக உணர்வினை, குடிமக்கள், தாங்களே நேரடியாகத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதின் மூலம்தான் பெற முடியும். கிராமப் புறங்களில் இப்போது நிலவும் வகுப்பு—சாதிப் பிரிவினைகளை அந்தத் தேர்தல் ஒழிக்கும். தகுதியான கிராமத் தலைமை உருவாவதற்கும் அந்தத் தேர்தல் தான் நல்லது; நிலைகளை உருவாக்க முடியும். அத்தகைய தலைமைதான், கிராமப்புனரமைப் பிற்கான திறவுகோலாகும். உத்தேசிக்கப்பட்டுள்ள திருத்தம் தனது முன்னேற்றத்திற்கான அரிய கருவியை கிராம மக்களிடமிருந்து பறித்துவிடுகிறது. இது மிகவும் பிற்போக்கான நடவடிக்கையாகும்.

பஞ்சாயத்தார்களின் பதவிக் காலம், மூன்றாண்டுகளிலிருந்து ஐந்து ஆண்டுகளாக உயர்த்தப்படும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தக் கால நீடிப்பு தேவையில்லாதது—விரும்பத்தகாதது. பஞ்சாயத்துப் பிரச்சினைகள், ஐந்தாண்டு காலக் கொள்கைகளையோ, திட்டங்களையோ அவசியமாக்கவில்லை. அவை மிக எளியதன்மையனவாகும். மூன்றாண்டுக்காலம் என்ற இப்போதைய ஏற்பாடு, நியாயமாகப் போதுமானதாகும். ஐந்தாண்டுக்கால ஏற்பாடு, பொறுப்புணர்ச்சியைக் குறைக்கும், அந்த வகையில், இந்த இரண்டு திருத்தங்களும் விவேகமானவை அல்ல"

—என்று, நெல்லையைச் சேர்ந்த வ. எஸ். குப்புசாமி என்பார், 'இந்து' 30—10—57-ந் தேதி இதழில் கடிதம் ஒன்று எழுதியிருக்கிறார்.

தாங்களாக முன்வந்து சம்பளத்தைக் குறைத்துக் கொள்ளும் அதிகாரிகள்!

புதுடில்லி, அக். 30—

இரண்டாம் திட்டத்திற்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்தினாலோ, அல்லது, சிக்கனம் வேண்டும் என்ற பண்டிதரின் வேண்டுகோளுக்கு மதிப்பளித்தோ சில அதிகாரிகள் தங்களது சம்பளத்தைக் குறைத்துக் கொள்ளச் சம்மதித்திருக்கிறார்களாம்!

வழக்கமான போக்கிற்கு மாறாக, அதிகாரிகள் மேற்கொண்டுள்ள இந்த நல்ல காரியம் சர்க்காரின் பாராட்டுதலுக்கு உரியது என்று சர்க்கார் குறிப்பு ஒன்று கூறுகிறது.

அத்துடன், இவர்கள் தங்களது சம்பளத்தை வெட்டிக்கொள்வதற்கு மாறாக, சர்க்காரிடம் ஒப்படைக்க விரும்பும் தொகையை, தேசிய சேமிப்புப் பத்திரங்களிலோ, கடன் பத்திரங்களிலோ போடுமாறும், அல்லது அருகில் உள்ள சர்க்கார் கஜானாக்களில் செலுத்துமாறும் சர்க்கார் கேட்டுக்கொண்டிருக்கிறதாம்!

பல்கலைக் கழகங்களுக்கு டெல்லியின் கோரிக்கை

புதுடில்லி, நவ. 1—

சமுதாய அபிவிருத்தித் திட்டத்தை—பொருளாதாரம், கல்வி ஆகிய பட்டப் படிப்புகள், பட்ட—பிற்காலப் படிப்புகள் ஆகியவைகளுக்கான பாடத் திட்டங்களில் ஒரு பகுதியாகவும், விரிவுபடுத்தும் திட்டத்தை—பொது சுகாதாரம், விவசாயம், கால்நடை—மருத்துவ விஞ்ஞானம் போன்ற பட்டப் படிப்புகளுக்கான பாடத் திட்டத்தில் ஒரு பகுதியாகவும் சேர்த்துக்கொள்ளும்படி நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்களை மத்திய சர்க்கார் கேட்டுக்கொண்டிருக்கிறதாம்.

'சேலத்தில் விமான நிலையம் ஏற்படுத்துக'

மாவட்ட ஆட்சிமன்றக் கோரிக்கை

சேலம், அக். 29—

சேலம் மாவட்ட ஆட்சிமன்றத்தின் இறுதிக் கூட்டம் 28-ந் தேதி மாலை தலைவர் டி. எம். காளியண்ணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது.

சேலம் முக்கியமான நகாமாக விளங்குவதால் சேலம் நகரில் விமான நிலையம் ஒன்றைக் கட்டுமாறு மத்தியப் பேரரசை மாநில அரசாங்க மூலம் கேட்டுக் கொள்ளுமாறு என். இ. மணி கொண்டுவந்த தீர்மானம் நிறைவேறியது.

சென்னை கவர்னர் ஜான், கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் ஆகியவர்கள் மரணத்திற்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

மாவட்டக் கழகத் தலைவர், அதிகாரிகள், சிப்பந்திகள் ஆகியவர்களின் சேவையைப் பாராட்டி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேட்டூர் அருகே உள்ள கொளத்தூரில் ஒவ்வொன்றும் ரூ. 50,000 செலவில் இரண்டு பாலங்கள் கட்ட முடிவு செய்யப்பட்டது.

பப்பாரப்பட்டியில் புதியதாக கட்டப்பட்ட பள்ளிக்கு 'தியாகி சிவா ஜில்லாபோர்டு பள்ளி' எனப் பெயரிட முடிவு செய்யப்பட்டது.

விருந்து

மாவட்ட ஆட்சிமன்றத் தலைவர் டி. எம். காளியண்ணன் மாவட்ட ஆட்சிமன்ற உறுப்பினர்களுக்கும், அதிகாரிகளுக்கும், சிப்பந்திகளுக்கும் தான் பதவியிலிருந்து விலகுவதை முன்னிட்டு 28-ந் தேதி இரவு விருந்தொன்றை அளித்தார். (நமதி.)

அக். 13: நாடெங்கும் இந்தி எதிர்ப்புக் கூட்டங்கள்

தி. மு. க. பொதுச்செயலாளர் விடுத்த அறிக்கைக்கிணங்க 3—10—57-ல் நாடெங்கும் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு ஊர்வலங்கள்—பொதுக்கூட்டங்களின் விவரம் இங்கு தரப்படுகிறது :—

ஒட்டன்சத்திரம் :

மாலை 6 மணியளவில், தி. மு. கழகச்சார்பில், வ. உ. சி. திடலில் மு. உதயசூரியன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் நா, இரங்கசாமி ச. முத்துச்சாமி ஆகியோர் பேசிய பின்னர் தோழர் மு. கரிகாலன் தீர்மானங்களை வாசித்து கூட்டத்தில் நிறைவேற்றினர்.

அலங்கியம் :

தி. மு.கழகச் சார்பில், தோழர் முத்துரேசன் தலைமையில் இந்தி எதிர்ப்பு ஊர்வலமும் கூட்டமும் நடத்தப்பட்டன; இந்தி எதிர்புத் தீர்மானங்கள் கூட்டத்தில் படிக்கப்பட்டு மக்களின் கையொலிக்குப்பின் அமோக ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டன.

அறந்தாங்கி :

நகர தி. மு. கழகச் சார்பில் மாபெரும் இந்தி எதிர்ப்பு ஊர்வலம் கழகப் பணிமனையிலிருந்து மாலை 6 மணிக்கு புறப்பட்டு, கண்டன ஒலிகளை எழுப்பிக்கொண்டும், அட்டைகளைத் தாங்கிக்கொண்டும் பல முக்கிய வீதிகள் வழியாகச் சென்று வ. உ. சி. திடலை அடைந்தது; பின்னர் தோழர் எம். குமரய்யா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் மு. மீரா, இராம. அசோகன், சுப. சதாசிவம் ஆகியோர் இந்தி புகுத்தப்படுவதைக் கண்டித்துப் பேசினர். பின் பலத்த கை யாலிகளுக்கிடையில் செயலாளர் நா. மாரிமுத்து அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்தி எதிர்ப்புத் தீர்மானங்கள் நிறைவேறின.

சாத்தான்குளம் :

தி. மு. கழகச் சார்பில் அமிர்தவன நகரில் தோழர் ஆபிரகாம் தலைமையில் இரவு 7-30 மணிக்கு இந்தி எதிர்ப்புக் கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் பி. ஆறுமுகத்துரை, சு. யோவான், ஆர். சண்முகம், ஜான் டேவிட், இரா. நல்வினைவேல், கே. சேர்மத்துரை ஆகியோர் இந்தித் திணிப்பைக் கண்டித்துப் பேசினர்.

சுந்தரபுரம் :

கோவையை அடுத்த சுந்தரபுரத்தில் கே. வி. கே. சாமி மன்றச் சார்பில் 12—10—57 மாலை 6-30 மணிக்கு இந்தி எதிர்ப்புக் கூட்டம் வெ. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது; தோழர்கள் புலவர் இராமசாமி, கி. சி. நாதன், சதிர்வேந்தன், பே. சோரன் ஆகியோர் இந்தி ஏகாதிபத்தியத்தின் எதேச்சாதிகாரப் போக்கைக் கண்டித்துப் பேசினர்.

மேலூர் :

தி. மு. கழகச் சார்பில் மாலை 6 மணிக்கு, மந்தைத் திடலில் தோழர் எ. வேலுசாமி தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் அசோகன், கா. மு. காதர்மைதீன், சா. பெ. மகேச்சாமி, மு. ஷேக்தாவூது, மு. க. இளமொழி முதலானவர்கள், இந்தி தமிழகத்தில் திணிக்கப்படுவதைக் கண்டித்துச் சொற்பொழிவு நிகழ்த்தியபின் செயலாளர் ப. தங்கவேலரால் தீர்மானங்கள் வாசிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேறின.

பைத்தம்பாறை :

மாலை 5 மணிக்கு, என். எஸ். கே. திடலில் தாளமுத்து-நடராசன் அரங்கில் பொதுக்கூட்டம் தோழர் வெ. சு. ரா. இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது; தோழர்கள் பெ. மாணிக்கம், எம். எஸ். பழனியாண்டி ஆகியோர் இந்தித் திணிப்பை எதிர்த்துப் பேசினர்; கண்டனத் தீர்மானத்தை தலைவர் படித்து ஏகமனதாக நிறைவேற்றினர்.

சேவூர் (ஆரணி) :

மாலை 6 மணிக்கு தி. மு. கழகச் சார்பில், தோழர் கே. பி. சின்னப்பா தலைமையில் ஊர்வலம் துவங்கிற்று. ஊர்வலம் சுற்றிக்கொண்டு வந்து மன்றத்தை அடைந்ததும் நடந்த கூட்டத்திற்குத் தோழர் கே. எம். சாரங்கபாணி தலைமை தாங்கினர்; தோழர் கே. டி. குப்புசாமி பேசியதும், செயலாளர் வி. இ. செயராமன் தீர்மானத்தைப் பற்றி விளக்கிப் பேசியவுடன் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இரவு 7 மணிக்கு அழகிரி மன்றச் சார்பில் தோழர் ஏ. கே குமாரவேலன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் வீ. பரசுராமனுர், ஆர். கே. மாதவன், எஸ். ஜி. கோபாலன், மு. சோமு, போ. ர. செயராமன், சி. என். ஜானகிராமன், இரா. புருஷோத்தமன், எஸ். ஏ. கைலைதன் ஆகியோர் இந்தி ஏகாதிபத்தியம் பற்றியும், வடவர் எதேச்சாதிகாரம் குறித்தும் பேசியபின் கூட்டத் தலைவர் அவர்களால் கண்டனத் தீர்மானம் படிக்கப்பட்டு தோழர் எஸ். ஏ. கைலதன் அவர்களால் வழிமொழியப்பட்டு கூட்டம் பலத்த கையொலிக்கிடையே தீர்மானங்களை ஏற்றுக் கொண்டது.

தாராபுரம் :

மாலை 3 மணிக்கு, ப. தண்டபாணி தலைமையில் நகரின் முக்கிய வீதிகளில் சைக்கிள் ஊர்வலம் நடைபெற்றது; மாலை 6 மணிக்கு, இஸ்லாமியா பேட்டையில், தோழர் கா. வெ. குப்புசாமி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் சிதம்பரனுர், நாராயணன், நகர தி. மு. கழகச் செயலாளர் எஸ். ஏ. குஞ்சு ஆகியோர் இந்தித் திணிப்பை எதிர்த்துப் பேசினார்கள். கூட்டத்தில் பெருத்த ஆரவாரத்திடையே தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கல்லக்குடி :

மாலை 5 மணிக்கு, தோழர் அ. தம்புசாமி தலைமையில், புள்ளம்பாடி பிர்க்கா கிளைக் கழகத் தோழர்களும், பொதுமக்களும் அணிவகுத்து ஊர்வலமாகச் சென்றனர்; 6 மணிக்கு, தோழர் ஆர். மாணிக்கம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது; பல தோழர்கள் பேசியபின், இந்தி எதிர்ப்புத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

நாச்சியார்கோவில் :

தி. மு. கழகச் சார்பில் கண்டன ஊர்வலம், தோழர் ஆர். பி. ரங்கன் இல்லத்திலிருந்து புறப்பட்டு முக்கிய வீதிகளின் வழியாக கண்டன ஒலி முழக்கங்களை எழுப்பிய வண்ணம் சென்று முடிவடைந்தது.

காளி—திருமங்கலம் :

காலை 10 மணிக்கு, காளி—திருமங்கலம், செண்பகச்சேரி தி. மு. கழகத் தோழர்கள் சார்பில் கண்டன ஊர்வலம், தோழர் சிவலிங்கம் தலைமையில், செண்பகச்சேரியிலிருந்து புறப்பட்டு, இந்தி எதிர்ப்பொலிகளை முழங்கிக்கொண்டு திருமங்கலம், காளி முதலிய ஊர்களில் வலம்வந்தது.

சத்திரப்பட்டி :

தி. மு. கழகச் சார்பில் மாலையில் கொட்டுமேளம், தாரைதப்பட்டம் முழங்க சத்திரப்பட்டி, சங்கரபாண்டியபுரம், சமுசிகாபுரம் வழியாக ஒரு மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு இறுதியில் காகைக்குளம் கண்மாயில் முடிந்தபின், அங்கு தோழர் ச. குருசாமி பாண்டியன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் டி. கே. கே. சாமி, ஜி. கே. வேலன், ச. முத்துசாமி ஆகியோர் இந்தித் திணிப்பைக் கண்டித்துப் பேசினார்கள். இறுதியில் கண்டனத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

திருமங்கலம் :

நகர கழகச் சார்பில், மாலை 5 மணிக்கு, தி. மு. கழக அலுவலகத்திலிருந்து ஓர் ஊர்வலம் நகரின் முக்கிய வீதிகள் வழியே இந்தி எதிர்ப்பு ஒலிகளை முழங்கியவாறு குமரன் திடலை அடைந்தது; 7 மணிக்கு, தோழர் சோலை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் க. ம. வ. நடராசன், பிச்சை, இராசேந்திரன் பேசினர்; தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

உ. த. இடங்கண்ணி :

மாலை 5 மணிக்கு, காசிநாதன் தலைமையில், அழகர்சாமி திடலிலிருந்து ஊர்வலம் புறப்பட்டு கிராமத்தின் முக்கிய வீதிகளில் வந்தது; மாலை $6\frac{1}{2}$ மணிக்கு தோழர் துரைசாமி தலைமையில், தோழர்கள் தமிழ்வளவன், சலிய பெருமாள் முதலியோர் பேசியபின் கூட்டத்தில் இந்தி எதிர்ப்புத் தீர்மானங்கள் பலத்த கர ஒலிக்கிடையே நிறைவேற்றப்பட்டது.

பூலாங்குளம் :

தி. மு. க. சார்பில் தோழர் நா. மாரிமுத்து தலைமையில் கண்டன ஊர்வலம் நடைபெற்றபின் நடந்த பொதுக்கூட்டத்தில் இந்தி எதிர்ப்புத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சூரியமுத்தூர் :

காலை 7 மணியளவில் தோழர் கே. ஆர். சண்முகம் தலைமையில் மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு ஊரின் முக்கிய வீதிகளில் கண்டன ஒலிகளை முழங்கிக்கொண்டு சென்றது. இறுதியில் கழகப் பணிமனையில் இந்தி கண்டனத் தீர்மானம் நிறைவேற்றியது.

என். எஸ். கே. நாடக மன்றம்

தொடர்ந்து பணியாற்றும்

சென்னை, நவ. 1—

"கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள், இதுகாறும் தமது நாடகங்களாலும், கலா நிகழ்ச்சிகளாலும், பொதுவாகத் தமிழ்க்கலைகளுக்கும், சிறப்பாகப் பொதுநல நற்பணிகளுக்கும் பெரிதும் உதவி வந்ததை இந்நாடே அறியும்.

"கலைவாணர் அவர்களால் உருவாகி அவருடனேயே வளர்ந்து வாழ்ந்து வந்த என். எஸ். கே. நாடக சபையினராகிய நாங்கள் இனிமேலும் பல நாடகங்களை நாடெங்கும் நடத்தி, அன்னாரின் தாராளமான பாதையிலே நடந்துவரத் தீர்மானித்திருக்கிறோம் என்ற நல்ல செய்தியைப் பொது நிறுவனங்களுக்கும், மக்களுக்கும் பெருமையுடன் இந்த அறிக்கையின் மூலம் தெரிவித்துக் கொண்டு நல் ஆதரவுகளைப் பெரிதும் தர வேண்டுகிறோம்"

என, என். எஸ். கே. நாடக சபையினர் சார்பில் அறிவிக்கப்படுகிறது.

துணி உற்பத்தியில்......

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கின்றன; அவைகளில் சுமார் 1,23,00,000 கதிர்களும், சுமார் 2 இலட்சம் தறிகளும் இருக்கின்றன; அவைகள், ஆண்டொன்றுக்கு சுமார் 530 கோடி கெசம் துணி உற்பத்தி செய்கின்றன; மொத்தம் 15 இலட்சம் கைத்தறிகள் இயங்குவதற்குத் தேவையான நூலையும் அவை விநியோகம் செய்துவருகின்றன.

நாட்டின் துணி ஏற்றுமதிக்கு ஊக்கமளிக்கும்பொருட்டு, ஏற்றுமதிக்காக அதிகமாக 35 கோடி கெசம் துணியை உற்பத்தி செய்வதற்கு வசதியாக, மேலும் 18,000 தானே இயங்கும் தறிகளை அமைப்பதற்கு இந்திய சர்க்கார் அனுமதியளித்துள்ளனர்.

சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்

சடமங்கலம் :

19—10—57 மாலை 6 மணிக்கு தி. மு. கழகப் படிப்பகத்தின் கால்கோள்விழா தோழர் சி. பி. சிற்றரசு அவர்களால் நடத்தி வைக்கப்பட்டது.

இரவு 7 மணிக்கு தோழர் அரி கிருட்டினன் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர் டி. பி. அழகமுத்து, நம் நாட்டுப் பொருளாதார சீர்கேட்டை விளக்கியும், தோழர் எஸ். நெடுமாறன், திராவிட நாடு பிரிவினைத் தேவையின் அடிப்படையையும், தோழர் அன்பில் தருமலிங்கம், இந்தியின் கொடுமையை விளக்கியும், தோழர் சி. பி. சிற்றரசு, மற்ற எல்லாப் பிரச்சினைகளைப்பற்றியும் பேசிய பின், தோழர் பெருமாள் நன்றி கூறினர்.

திருப்பூர் :

20—10—57 மாலை 5 மணிக்கு 1, 2, 3, 4-வது வட்டாரங்களில் தோழர் சி. பி. சிற்றரசு அவர்களால் கொடியேற்றிவைக்கப்பட்ட பின், ஆற்றில், தோழர் சணேசன் தலைமையில் பொதுக்கூட்டம் தொடங்கியது; தோழர் சி. ஏ. பாலன் பேசியபின், தோழர் சிற்றரசு அவர்கள் சுமார் இரண்டு மணி நேரம் கொள்கை விளக்கம் தந்தார்; அவருக்கு ஏராளமான கைத்தறித் துண்டுகள் அணிவிக்கப்பட்டன.

அன்றிரவு 10 மணிக்கு வழிப்போக்கர் விடுதியில் தோழர் எஸ். ஆர். சுப்பிரமணியம் தலைமையில் ஊழியர் கூட்டம் நடந்தது; தோழர் சிற்றரசு அவர்கள் 'நமது எதிர்காலம்' என்பது பற்றியும், வரப்போகும் போராட்டத்தைப் பற்றியும் விளக்கிப் பேசினர்.

மேட்டூர் அணை :

21—10—57 மாலை இந்திக் கண்டன (சைக்கிள்) ஊர்வலம் ஒன்று கழகக் கொடிகளையும், கண்டன வாசகங்களடங்கிய அட்டைகளையும் ஏந்தி நகரத்தின் முக்கிய தெருக்களின் வழியாகக் கூட்டம் நடக்கும் இடத்திற்கு மாலை 6-30 மணிக்கு வந்துசேர்ந்தபின் பொதுக்குழு உறுப்பினர் தோழர் கே. சி. சின்னசாமி தலைமையில் கூட்டம் தொடங்கியது. தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர் பாலுவால் சில தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டபின் தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள், 'தொழிலாளர் மத்தியிலே நாம்' என்பதைப் பற்றியும், கருணையற்ற காங்கிரஸ் சர்க்காரின் போக்கைப்பற்றியும் விளக்கிப் பேசினர்.

கண்ணூரச்சி :

22—10—57 மாலை 6-30 மணிக்கு பொதுக் கூட்டம் ஊராண்மைக்கழகத் தலைவர் தோழர் கோபால் தலைமையில் தொடங்கியது. தோழர் சின்னசாமி சிறிதுநேரம் பேசியபின், தோழர் சி. பி. சிற்றரசு நீண்டதோர் விரிவுரையாற்றினர்.

பாரைப்பட்டி :

23—10—57 மாலை 6 மணிக்கு தோழர் ஆறுமுகம் தலைமையில் கூட்டம் தொடங்கியது; தோழர் குப்பமுத்து இசைவிருந்தளித்த பின் தோழர்கள் மாணூர் துரை, சண்முகம் ஆகியவர்கள் பேசிய பின், தோழர் சிற்றரசு அவர்கள், தேர்தலுக்குப் பின் புதிதாகத் தோன்றிக்கொண்டிருக்கும் கழக வளர்ச்சியைப்பற்றியும், கழகத்தின் அடிப்படைக் கொள்கைகளும்—அதில் உறுப்பினர்கள், அனுதாபிகள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் கடமைகள் என்பவைகளைப் பற்றியும் நீண்டதோர் சொற்பொழிவாற்றினர்.

பழைய ஆயக்குடி :

24—10—57 இரவு 7 மணிக்கு தோழர் நூர் முகம்மது தலைமையில் பொதுக்கூட்டம் தொடங்கியது; தோழர் சண்முகம் உள்ளூர் சம்பந்தமாகச் சில தீர்மானங்களைக் கொண்டுவந்து விளக்கிப் பேசி தீர்மானங்களை நிறைவேற்றியபின், தோழர் சி. பி. சிற்றரசு, திராவிடம் பிரியாதிருப்பதால் வடவரால் ஏற்படுகின்ற தொல்லைகளையும் துயரங்களையும் விளக்கி சுமார் 2 மணி நேரம் பேசினர்.

இலங்கை தி. மு. கழக

சமூக சீர்திருத்த மாநாடு

★.

"நவம்பர் திங்கள் கடைசியில் இலங்கை நாவலப்பிட்டி யு. சி. மைதானத்தில், புத்தர் பந்தலில் கொள்கை வீரன் கே. வி. கே. சாமி அரங்கில் இ. தி. மு. கழக முதலாவது சமூக சீர்திருத்த மாநாடு சிறப்புற நடைபெறும்; மாநாட்டில் சீர்திருத்த சிற்பிகளான சாக்ரடீஸ், சன்யாட்சன், கார்ல் மார்க்ஸ், லெனின், கமால் பாட்சா, டாக்டர் ஆனந்தகுமாரசாமி, அண்ணு, கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் ஆகியோர்களின் திருஉருவப் படங்களை பல அரசியல்—அறிவியல் தலைவர்கள் திறந்துவைத்து உரை நிகழ்த்துவார்கள்; தமிழகத் தலைவர்களும் கலந்துகொள்ள வருகின்றனர்; இயக்கத் தோழர்கள் அனைவரும் மாநாடு வெற்றி பெற இயன்றவரை உதவ—ஒத்துழைக்கக் கோருகிறோம்"

என, மாநாட்டு வரவேற்புக் குழுவினர் கேட்டுக்கொள்கின்றனர்.

தூத்துக்குடி அஞ்சல் ஊழியர் சங்கம்

க. அன்பழகன் எம்.எல்.ஏ. அவர்களுக்கு வரவேற்பு

13—10—57 மாலை சுமார் 3 மணிக்கு அகில இந்திய தந்தி ஊழியர் சங்கம் 4-ம் பிரிவு (தூத்துக்குடி கிளை) சார்பில் மேற்படி சங்கத்தின் மாகாணத் தலைவர் தோழர் க. அன்பழகன் எம். எல். ஏ. அவர்களுக்கு ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது; திரு. டி. ஞானையா தலைமை தாங்கினர்; திரு. எம். பொன்னுசாமி வரவேற்பிதழ் வாசித்தளித்தார்; தலைவர், அ. இ. தபால்—தந்தி ஊழியர் சங்கம் எந்தச் சிறந்த கொள்கையின் அடிப்படையில் இயங்குகிறது என்பதுபற்றி விளக்கினர்.

பின்னர் தோழர் அன்பழகன் அவர்கள், தமக்கு அளித்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்தும் மேற்படி சங்கத்திற்குத் தான் எந்த முறையில் பணியாற்ற முடியும் என்பது பற்றியும் சங்கம் சிறப்புறச் செயலாற்ற வேண்டுமெனில் சங்க நடவடிக்கைகள் எந்தக் கட்சியின் சார்பும் அற்றவையாகஇருக்கவேண்டும் என்றும் எடுத்துரைத்தார்.

உலக மக்கள் தொகை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாடும் 5 கோடிக்கும் அதிகமான மக்களுடையதாகும்.

சீனுதான் உலகிலேயே அதிக மக்களுடைய நாடு; அதாவது 58,26,03,000 என்பது சீன மக்கள் தொகை என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

அடுத்தபடி அதிக மக்களுடையது இந்தியா; இதன் மக்கள் தொகை 38,87,97,000 எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

முகவரி மாற்றம்

க. அறிவழகன் எம்.ஏ.
167, திருவொற்றியூர் நெடுஞ்சாலை
வண்ணையம்பதி, சென்னை-21.

* * *

ஏ. கே. வில்வம் — அருண்மொழி
பி. ஓ. எல்.
எஸ். ஜி. முதலியார் தெரு,
ஆர்க்காடு (வ. ஆ)

சிற்றுண்டி உணவு விடுதித் தொழிலாளர் சட்டம்

'நிறைவேற்றத் தாமதம் கூடாது'

சட்ட மன்றத்தில் க. அன்பழகன் தெளிவுரை

சென்னை, நவ. 2—

சிற்றுண்டி, உணவு விடுதிகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கு நன்மைதரும் சட்டம் ஒன்று இன்று நடைபெற்ற சட்ட மன்றத்தில் தொழில் அமைச்சர் திரு. வெங்கட்ராமன் கொண்டு வந்தார். சட்டம் ஆய்வுக் குழுவின் பரிசீலனைக்கு விடப்பட்டது. அந்த ஆய்வுக் குழுவில் நமது கழக உறுப்பினர்களான தோழர்கள் க. அன்பழகன், எம். பி. சாரதி இடம் பெற்றுள்ளனர்.

ஆய்வுக் குழு இதுபற்றி ஆராய்ந்து, அடுத்து கூடும் சட்ட சபையின் முதல்வார இறுதி நாளுக்குள் முடிவுகளை அறிவிக்கும் என்று தெரியவருகிறது.

இந்தச் சட்டம், சென்னை நகரம், மேஜர் பஞ்சாயத்துப் பகுதிகள், ஊராட்சிப் பகுதிகளுக்கு அமுலாகும்; சிறு கிராமங்களுக்கு இந்தச் சட்டம் பொருந்தாது.

விடுதிகளை நடத்துவோர் கட்டாயமாகப் பதிவு செய்துகொள்ள வேண்டும். விடுதிகளை நடத்தும் குடும்பங்களுக்கு விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது.

சட்டம், தொழிலாளர்களை மூன்று பிரிவுகளாகப் பிரித்துள்ளது—14 வயதிற்கு குறைந்தவர்கள்; 14 முதல் 18 வயதிற்கு உட்பட்டவர்கள்; 18 வயதிற்கு மேற்பட்டவர்கள்—என்பது சட்டத்தின் பிரிவுகளாகும்.

ஒருவாரத்திற்கு 48 மணி நேரம் மட்டும் உழைக்க வேண்டும் என்றும், ஒரு நாளைக்குத் தொடர்ந்து 5 மணி நேரத்திற்கு மேல் உழைக்கக்கூடாது என்றும், ஒரு நாளைக்கு 9 மணி நேரத்திற்கு அதிகம் வேலை செய்யக்கூடாது என்றும், வாரத்திற்கு ஒரு நாள் ஓய்வு தரவேண்டும் என்றும், அதிக வேலைக்கு இரண்டு மடங்கு ஊதியம் தரப்படவேண்டும் என்றும், அரைமணி நேர இடைக்கால ஓய்வு ஒரு நாளைக்குத் தரப்பட வேண்டும் என்றும், 20 நாள் உழைத்தவர்களுக்கு 1 நாள் ஊதியத்துடன் ஓய்வு தரப்படவேண்டும் என்றும், இரவு நேரத்தில் பெண்களும் சிறுவர்களும் உழைக்கக் கூடாது என்றும், 6 திங்கள் உழைத்தவர்களைக் காரணமில்லாது வேலையினின்றும் நீக்கக் கூடாது என்றும் இந்தச் சட்டம், விதிகள் விதித்துள்ளது.

இதை நிறைவேற்ற மறுக்கும் விடுதி அதிபர்கள், முதல் முறை குற்றத்திற்கு ரூ. 250 அபராதமும், அடுத்த குற்றங்களுக்கு ரூ. 500 அபராதமும் விதிக்க சட்டம் இடம் தருகிறது.

க. அன்பழகன்

இந்தச் சட்டத்தை வரவேற்று நமது கழக உறுப்பினர் தோழர் க. அன்பழகன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"இத்தகைய நல்ல சட்டத்தை முழுமனதுடன் ஆதரித்து மேலும் சிற்றுண்டி, உணவு விடுதித் தொழிலாளர் மனதில் அமைதி ஏற்படவும், குறைகள் களையப்பட்டு நல்ல சூழ்நிலை உருவாகவும் ஒரு சில வார்த்தைகள் கூறவிரும்புகிறேன்.

"சட்டத்தை எந்த வடிவில் நிறைவேற்றுவது என்பதை ஆய்வுக்குழு ஆராய அமைச்சர் இசைந்துள்ளதை நான் வரவேற்கிறேன்.

"இந்தச் சட்டம் துரிதமாக நிறைவேற்றப்படவேண்டும் என்பதே என் கருத்து. இப்போது சட்டமில்லாத நிலை, விடுதி அதிபர்களின் சுயநல வேட்கைக்கு இடமளித்துவருகிறது. அதனால் தான் இச்சட்டம், அவசரமாக—காலதாமதமின்றி சட்டமாக்கப்படவேண்டுமென்று வற்புறுத்திக் கூறுகிறேன்.

"திறமையுடன் நிறைவேற்றப்பட்ட இந்திய அரசியல் சட்டமே மேலும் திருத்தப்படுகிறது; எனவே, இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டாலும்கூட புதிய சிக்கல்களைத் தீர்ப்பதற்குத் திருத்தங்கள் தேவைப்படும்.

"விடுதி நடத்துபவர்களிடையே ஆரிய—திராவிட உணர்ச்சி மேலிட்டிருப்பதை இந்த மன்றத்தில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசும்போது குறிப்பிட்டது, எந்த அளவுக்கு நாடு விழிப்புணர்ச்சி பெற்றுவருகிறது என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.

"விடுதியின் பெயர்ப் பலகைகளில் சாதிப் பெயர், மதப்பெயர் இருக்கக்கூடாது. பார்ப்பனர், முஸ்லிம், நாடார், சைவாள் என்ற அடைமொழி நீக்கப்பட வேண்டும்.

"இன்று நாட்டில் திராவிட கழகம் இதற்கான போராட்டத்தை நடத்திவருகிறது. இதை அரசாங்கம் சட்டத்தின் மூலம் எளிதில் நிறைவேற்ற முடியும் என்பதை நேற்று அறிஞர் அண்ணா அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். அதை அரசாங்கம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

"தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு விடுதிகளில் வேலையளிக்க வழிவகைகள் உருவாக்க வேண்டும்.

"இதை அமுலாக்கும் விடுதி அதிபர்களுக்கு நற்சான்று இதழ்கள், பரிசுகள், பாராட்டுகள், நன்கொடைகள் ஆகியவற்றை அளிக்க அரசாங்கம் முன்வர வேண்டும்.

"சட்டத்தில் ஊழியர்களுக்குத் தரப்படும் ஓய்வு நேரம் போதுமானதல்ல; படித்தும் வேலையற்ற பலர் இந்த விடுதிகளில் பணியாற்றுகின்றனர். அவர்களின் எதிர்காலம் செழுமையுள்ளதாக இருப்பதற்குத் திட்டம் வேண்டும்.

"14 மணி நேரத்திற்குள் ஒரு நாளைக்கு 9 மணி நேரம் உழைக்க வேண்டும்' என்பதை, '12 மணி நேரத்திற்குள்' என்று திருத்தப்பட வேண்டும்.

"ஊழியர்களுக்கு சேமிப்பு நிதி, இலாபத்தில் பங்கு, வெகுமதி முதலியன வேண்டும்; அப்போதுதான் தொழிலாளர் வாழ்நாள் முழுவதும் நிம்மதியுடன் வாழ முடியும்."

கழகக் கூட்டங்கள்

★

இராசிபுரம் (16-வது வட்டம்)
தி. மு. கழகக் கிளைத் திறப்பு விழா
காதர் சாயபு தெருவில்
6—11—57 மாலை 5 மணிக்கு
தலைவர்: இரா. தேசி
பேசுவோர்:
ஈ. ஆர். கிருஷ்ணன்
சிற்றுளி-சுப்பிரமணியம்

★

இடமணல்
(சீர்காழி வட்டம்)
5—11—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: சி. வடிவேல்
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
சி. ஜம்பு
க. கோபாலன்
எஸ். சோமசுந்தரம்

★

சோழபுரம் -- அம்மன்பேட்டை
6—11—57 மாலை 5 மணிக்கு
தலைவர்: ச. சகநாதன்
பேசுவோர்:
ஆறுமுகம்
பொன். தருமன்
ம. கோ. மணி
கு. இராசமாணிக்கம்
எஸ். ஏ. துரை
பி. ஏ. லிங்கன்

கழகத் தோழர்களுக்கு முக்கிய அறிவிப்பு

*

தி. மு. கழகக் கிளைகளின் நிர்வாகிகள் தேர்தல் பற்றிய செய்திகள், மாவட்டச் செயலாளரின் கையொப்பத்துடன் அனுப்பப்பட்டால்தான் 'நம் நாடு' இதழில் வெளியிடப்படும் என்று பொதுச்செயலாளர் விடுத்திருக்கும் அறிக்கையை நினைவில் கொண்டு, கிளைக் கழகத் தோழர்கள் அந்தச் செய்திகளை மாவட்டக் கழகச் செயலாளர் கையொப்பத்துடன் அனுப்ப வேண்டுகிறோம்.

—ஆசிரியர்

ஆராய்ச்சியின் முடிவு அமைச்சருக்கு தெரியாதாம்!

செயற்கை மழை பற்றி கழக உறுப்பினர் கேள்வி

சென்னை, நவ. 2—

செயற்கை முறையில் மழை பெய்யச் செய்யும் ஆராய்ச்சி சென்னை மாநிலத்தில் நடைபெற்றுவருகிறதுஎன்றும் ஆராய்ச்சியை மத்திய அரசாங்கம் செய்து வருகிறது என்றும், இந்த விஷயத்தில் அவசரம் கூடாது என்றும் சட்டமன்றத்தில் கேள்வி நேரத்தின்போது உள் நாட்டு அமைச்சர் பக்தவத்சலம், நமது கழக உறுப்பினர் தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் செயற்கை மழை ஆராய்ச்சி முடிவுகள் பற்றிக் கேட்டதோர் கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

"செயற்கை மழை ஆராய்ச்சிக்கான செலவுகளை மத்திய அரசு தருகிறதா அல்லது மாநில அரசு செலவிடுகிறதா?" என்று நமது கழக உறுப்பினர் தோழர் எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் கேட்டார்.

"மத்திய விஞ்ஞான ஆராய்ச்சிக் குழு நடத்தும் ஆராய்ச்சிக்கு சென்னை மாநிலம் ரூ. 6,500 இது வரை செலவிட்டுள்ளது" என்று அமைச்சர் பதிலளித்தார்.

"செயற்கை மழையை ரூ. 4 செலவில் கொண்டுவரலாம் என்று ஓர் ஆராய்ச்சியின்மூலம் முடிவு வெளியாகியுள்ளது அரசாங்கத்திற்குத் தெரியுமா?" என்று நமது கழக உறுப்பினர் தோழர் அண்ணாமலை கேட்டார்.

'இல்லை' என்று அமைச்சர் பதிலளித்தார்.

'நம் நாடு' இதழ் விற்பனையாளர் தேவை

கீழ்க்கண்ட ஊர்களில் 'நம்நாடு' இதழை விற்பனை செய்வதற்கு விற்பனையாளர்கள் தேவை; நிபந்தனைகளுக்கு விண்ணப்பித்துக் கொள்க:—

பூதலூர்
திண்ணனூர்
கல்லிடைக்குறிச்சி
இராஜசிங்கமங்கலம்
பேளூர் (சேலம் மாவட்டம்)
ஆலமரத்துப்பட்டி (கரூர் வட்டம்)
பாகசாலை (மாயூரம் வட்டம்)
சத்திரப்பட்டி

—நிர்வாகி: 'நம் நாடு'

'தென்றல்'

9—11—57-ந் தேதிய இதழில்

'அத்திப்பழம்'

*

மா. கி. தசரதன் எம். ஏ.

எழுதும் புதிய தொடர்
கதை ஆரம்பமாகிறது

தகுந்த முன்பணம் இல்லாத ஏஜெண்டுகளுக்கு அதிகப் பிரதிகள் அனுப்பப்பட மாட்டாது.

அண்ணா

சுற்றுப்பயணம்

நவம்பர்:
5: வாலாஜாபேட்டை (வ.ஆ.)
6: சென்னை: அரசாங்கக் கலைக் கல்லூரி

கிராமப் பஞ்சாயத்துச் சீர்திருத்தம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் குழுவின் உறுப்பினர்கள் நியமனம் செய்யப்படுகிறார்கள்; இது கூடாது; கிராம மக்கள் இக்குழுவினரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதே என் கருத்தாகும்.

"சில இடங்களில், சில காரணங்களுக்காகப் பஞ்சாயத்துகள் கலைக்கப்படுகின்றன. அந்த நிலையில் 'ஒரு தனி நபர்' நியமிக்கப்படுகிறார். அப்படி, எந்த ஒரு தனிநபரையும் நியமித்துவிட முடிகிறது; இந்த நிலை இருக்கக் கூடாது. அந்த நபர், 'குறைந்தது ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் அந்தஸ்துள்ளவராக இருக்க வேண்டும்' என்று திருத்தப்பட வேண்டும்."

விவாத இறுதியில் அமைச்சர், சட்டத்தை ஆய்வுக் குழு ஆராய அனுமதித்து, நமது கழக உறுப்பினர் தோழர் அண்ணாமலை அவர்களை, அந்த ஆய்வுக் குழுவின் ஒரு உறுப்பினராக நியமித்தார்கள்.

மாவட்ட அதிகாரிதான் முடிவு செய்ய வேண்டுமாம்!

ஏ. கோவிந்தசாமி கேள்விக்கு அமைச்சர் பதில்

சென்னை, நவ. 2—

தென் ஆற்காடு மாவட்டத்தில் சிங்கனூர் கிராமத்தில் தாழ்த்தப்பட்டோர் நல ஆரம்பப் பள்ளியில் போதுமான ஆசிரியர்கள் இல்லை என்பது சட்டமன்றத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

"இந்தப் பள்ளியில் 165 மாணவர்கள் படிக்கின்றனர்; மொத்தம் 3 ஆசிரியர்களே உள்ளனர்; 4 ஆசிரியர்களையாவது நியமிக்க அரசாங்கம் முன் வருமா?"

என்று நமது கழக உறுப்பினர் தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் கேட்டார்.

"அதுபற்றி மாவட்ட தாழ்த்தப்பட்டோர் நல அதிகாரிதான் முடிவு செய்ய வேண்டும்" என்று அமைச்சர் கக்கன் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

அரசாங்க ஊழியர்களுக்கு மொழிப் பரீட்சை

நிபந்தனையை நீக்குவது பற்றி சர்க்கார் முடிவு செய்யவில்லையாம்

சென்னை, நவ. 2—

அரசாங்க ஊழியர்கள் தாய் மொழியைத் தவிர மற்றொரு மொழிப் பரீட்சையில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிபந்தனையை நீக்குவது பற்றி இன்னும் சென்னை அரசாங்கம் முடிவு செய்யவில்லை என்று அமைச்சர் சுப்பிரமணியம் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

கட்டாயப் படுத்துவதால் தவறில்லையாம்!

சிக்கல்கள் ஏற்படுவதே தாமதத்திற்குக் காரணமாம்!

தேர்தல்கால ஊழியர்கள் நிலைபற்றி அன்பழகன் கேள்வி

சென்னை, நவ. 2—

"சென்ற பொதுத் தேர்தல் காலத்தில் ஊழியம் புரிந்த ஆசிரியர்களுக்கும், மற்றவர்களுக்கும் பெரும்பாலும், அவர்களுக்குச் சேர வேண்டிய 'படிச் செலவு'த் தொகையை சென்னை அரசாங்கம் தந்துவிட்டது" என்று நிதி அமைச்சர் சுப்பிரமணியம் சட்ட சபையில் தெரிவித்தார். உரியவர்களுக்குத் தரப்பட வேண்டிய உரிய தொகையை நிர்ணயிப்பதில் சிக்கல் ஏற்படுவதே இந்தத் தாமதத்திற்குக் காரணம் என்றும் அவர் கூறினார்.

தஞ்சை மாவட்டத்தில் இன்னும் 6 பேருக்கு மட்டுமே படிச் செலவுத் தொகை தரப்பட வேண்டியுள்ளதென்றும் அவர் குறிப்பிட்டார்.

"தேர்தல்களில் ஆசிரியர்களையும், மற்றவர்களையும் ஈடுபடுத்தியபோது அவர்கள் விருப்பத்திற்கு மாறாகக் கட்டாயப்படுத்தியது ஏன்?"

என்று நமது கழக உறுப்பினர் தோழர் க. அன்பழகன் அவர்கள் கேட்டார்.

"தேர்தலை நடத்துவது நல்ல உரிமை; அதைச் செய்ய மறுப்பவர்களைக் கட்டாயப்படுத்துவதில் தவறில்லை" என்று அமைச்சர் கூறினார்.

'வீடு கட்டித் தருக'

'சேரி ஒழிப்புத் திட்டத்தின்கீழ் ஆவன செய்க'

சேலம் நகரசுத்தித் தொழிலாளர் கோரிக்கை

சேலம், அக். 29—

சேலம் நகரசுத்தித் தொழிலாளர் சங்க நிர்வாகக்குழுக் கூட்டம், திரு. வி. பழனி தலைமையில் நடைபெற்றது. சங்க நடவடிக்கைகளைப் பற்றி செயலாளர் சே. செல்லப்பன் விரிவாகக் கூறினார்.

நகர சுத்தித் தொழிலாளர்களுக்காக இருந்து, மூடப்பட்டிருக்கும் கூட்டுறவு கடன் வழங்கும் சொசைடியின் வரவு-செலவுகளைப் பார்க்க ஒரு அதிகாரியை நியமிக்குமாறும், 'கம்போஸ்ட்' முதலியவைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு பூட்சும், கைகளுக்கு உறையும் வழங்குமாறு நகரசபையைக் கோரியும், சேரி ஒழிப்புத் திட்டத்தின்கீழ் நகர சுத்தித் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்குமாறு சென்னை சர்க்காரையும், நகரசபையையும் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.